## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | அ.சா.24 |
| Name | : | மணிமேகலை |
| Husband Name | : | முரளி |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 29/2025 |

**தேதி : 03.06.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் செட்டிக்குளத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எதிரி வசந்தியை தெரியும். லோன் வாங்கி கொடுத்த வகையில் வேறு ஒருவர் மூலமாக எதிரி வசந்தியை எனக்கு தெரியும். எதிரி என்னிடம் அவருடைய மாமனாரின் மருத்துவ செலவிற்காக பணம் தேவைப்படுவதாக சொன்னார். நான் முடியாது என்று சொன்னேன். நான் இதற்கு முன்பு உனக்கு எத்தனை லோன் வாங்கிகொடுத்துள்ளேன் என்று எதிரி என்னிடம் சொன்னார். மேலும் லோன் பணத்தை அவரே கட்டிவிடுவதாக சொன்னார். அதனால் நான் பெரம்பலூரில் உள்ள Equitas என்ற தனியார் நிறுவனத்தில் கடன் ரூ.50,000/-ஐ பெற்று வசந்தியிடம் ரொக்கமாக பணம் கொடுத்தேன். அவர் அந்த கடன் தொகையின் தவணைகளை கட்டிவிடுவதாக சொன்னதை நம்பி கடன் வாங்கிகொடுத்தேன். ஆனால் எதிரி வசந்தி இரண்டு தவணைகள் மட்டுமே கட்டினார். மீதி தவணைகளை செலுத்தவில்லை.பைனான்ஸ் கம்பெனியிலிருந்து போன் செய்து என்னை

பணம் கட்ட சொன்னார்கள். நான்வசந்திக்குத்தான்கடன் வாங்கிகொடுத்தேன் என்றும், வசந்தி கட்டிவிடுவார் என்றும் சொன்னேன். ஆனால் அவர்கள் வசந்தி பணம் கட்டாமல் தலைமறைவாகிவிட்டதாக சொன்னார்கள். வசந்திக்கு நான் வாங்கிகொடுத்த Equitas நிறுவனத்தின் உறுப்பினர் புத்தகம் என்னிடம் உள்ளது. **Equitas கடன் உறுப்பினர் புத்தகத்தின் நகல் அ.சா.ஆ.52 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் புத்தகம் சாட்சியிடம் திரும்ப கொடுக்கப்பட்டது).** வசந்தியின் வீட்டில் நான் சென்று பார்த்தபோது அவர் வீட்டில் இல்லை. விசாரித்தபோது அவர் என்னைமட்டுமில்லாமல் நிறைய பேரை ஏமாற்றியுள்ள விவரம் தெரிந்துகொண்டேன். சத்தியா என்பவர் பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலை் புகார் கொடுத்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள். வசந்திக்கு வாங்கிகொடுத்த கடனுக்கான தவணை தொகைகளை தற்போது என்னால் கட்டமுடியாமல் கஷ்டப்பட்டு வருகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரி வசந்தியை எனக்கு இரண்டு, மூன்று வருடங்களாக பழக்கம். இதற்கு முன்பு எதிரி எனக்கு லோன் வாங்கிகொடுத்துள்ளார். நான் அவருக்கு லோன் வாங்கி கொடுக்கவில்லை. எதிரி அவருடைய மாமனாருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி லோன் வாங்கினார். போலீஸார் என்னை விசாரித்தபோது Equitas நிறுவனத்தில்தான் பணம் வாங்கி கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. கடனில் இரண்டு தவணைகளை செலுத்தியுள்ளார். எந்த தேதியில் கடன் வாங்கிகொடுத்தேன் என்று போலீஸார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு ஏமாற்றவேண்டுமென்ற எண்ணம் இல்லை. எல்லோரும் சேர்ந்து அவரை முற்றுகையிட்டதால் அவரால் தவணைகளை சரிவர செலுத்தமுடியவில்லை என்றால் சரியல்ல.

எனக்கு சேர வேண்டிய பணத்தை எதிரி தந்துவிடுவார் என்றால் கொடுத்தால் வாங்கிகொள்ளுகிறேன்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.